Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 121 / 2021

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஆனந்தஜோதி | Calling: | விவசாயம் |
| Father's / Husband's Name: | வரதன் | Religion: | |
| Village: | நாயனசெருவூர் | Age: | 58 |
| Taluk: | நாட்றம்பள்ளி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 17.06.2025

(2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. 1ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 1 முதன்மை விசாரணை

சுமார் 5 வருடத்திற்கு முன்பு எங்கள் நிலத்தில் எனக்கும், லோகநாதன் மற்றும் சசிகுமாருக்கும் பிரச்சனை நடந்தது. லோகநாதன் என்னை பிரச்சனையின் போது கல்லால் தலையில் அடித்தார் அதனால் எனக்கு தலையில் 10 தையல்கள் போடப்பட்டது. சசிகுமார் என்பவர் என்னை ராடால் அடித்தார். அதனால் நெற்றியில் அடிப்பட்டது. பிரச்சனை அனைத்தும் எங்கள் நிலத்திலேயே நடந்தது. பின் என் அண்ணன் பையனிடம் சொல்லி 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். 3 நாள்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். பிறகு டிஸ்ஜார்ஜ் செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். நானும் கொடுத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார்**

**வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

நான் எனது முதன்மை விசாரணையில் கூறிய விவரத்தை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நாயனசெருவூரில் காலனி வழியாக வந்தால் தான் என் நிலத்திற்கு வரமுடியும் என்றால் சரிதான். அந்த வழி கால் நடை பாதை என்றால் சரிதான். அந்த வழியாக வரும்போது நடராஜன், ராஜி, கண்ணுபையன், ராஜ்குமார், லலிதா ஆகியோர் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகள் என் நிலத்திலிருந்து கூப்பிடும் தொலைவில் தான் உள்ளது என்றால் சரிதான். லோகநாதன் நிலம் மேற்குபுறத்திலும், என் நிலம் கிழக்கு பக்கத்திலும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். எங்கள் இருவரின் நிலத்திற்கு இடையே ஒரு வரப்பு உள்ளது என்றால் சரிதான். என் நிலத்தில் கிணற்றுக்கு முன் மின் இணைப்பு பெட்டி உள்ளது என்றால் சரிதான். கிணற்றுக்கு தெற்கு திசையில் மின்சார பெட்டி உள்ளது என்றால் சரிதான். வரப்பை ஒட்டி என்னுடைய நிலத்தில் கிழக்கு திசையில் ஒரு கால்வாயும், தெற்கு திசையில் ஒரு கால்வாயும் உள்ளது என்றால் சரிதான். அந்த 2 கால்வாயும் பிரியும் இடத்தில் கற்களை நட்டு வைத்துள்ளோம் என்றால் சரிதான். லோகநாதன் நிலம் மேலே உள்ளது, எங்கள் நிலம் கீழே உள்ளது என்றால் சரிதான்.

லோகநாதன் நிலத்திற்கு 4 அடி கீழே என் நிலம் உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிலிருந்து என் நிலம் சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு அடிக்கடி வலிப்பு வருமா என்றால் இல்லை. எனக்கு தலையில் அடிப்பட்டு ரத்தம்வந்தபோது என் துண்டு, சட்டை அனைத்தும் ரத்தத்தில் நனைந்துவிட்டது என்றால் சரிதான். அந்த ரத்தம் படிந்த துணிகளை போலிசாரிடம் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். நான் ஒரு நாள் மருத்துவமனையில் ஒரு நாள் முழுவதும் மயக்க நிலையில் இருந்தேன் என்றால் சரிதான். அதன்பின் தான் போலிசர் என்னிடம் பெயர், முகவரி போன்ற விவரங்களை குறிப்பெடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

போலிசார் என்னிடம் எழுதப்படாத வெள்ளை தாளில் ஒரு கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். எழுதப்படாத வெள்ளை தாளில் பெற்ற கையொப்பம் தான் தற்போது நீதிமன்றத்தில் காட்டிய கையொப்பம் என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மருத்துவமனையில் என்னை யார் சேர்த்தார்கள் என்றால் என் அண்ணன் பையன் சேர்த்தார். மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். நிலம் சம்மந்தமாக ஏற்கனவே எதிரிகளுக்கும் எனக்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். எதிரி என்னை அடிக்கவில்லை என்றாலும், நான் தவறி கீழே விழுந்ததால் தான் எனக்கு அடிப்பட்டது என்றாலும் சரியல்ல. நிலம் சம்மந்தமாக முன்விரோதம் இருப்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ஆனந்தஜோதி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K